செ.வெ.எண்:07 நாள்:02.11.2018

## கரூர் மாவட்டம்

## மாவட்ட நீதித்துறையில் காலியாகவுள்ள கணினி இயக்குபவர் பணியிடங்களுக்கு விண்ணப்பித்தவர்களில் தகுதிவாய்ந்த விண்ணப்பதார்களுக்கு 24.11.2018 அன்று நேர்காணல் நடைபெறவுள்ளது-மாவட்ட முதன்மை நீதிபதி அவர்கள் தகவல்.

கரூர் மாவட்ட நீதித்துறையில் காலியாகவுள்ள **கணினி இயக்குபவர்** பணியிடங்களை நிரப்புவதற்காக தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பத்திரிக்கை செய்தி மற்றும் இணையதளம் வாயிலாக கோரப்பட்டதன், பேரில் வரப்பெற்ற விண்ணப்பங்களை பரீசிலனை செய்யப்பட்டதில், தகுதியான விண்ணப்பதாரர்கள் என்று அடையாளம் காணப்பட்டுள்ள நபர்களுக்கும் மேலும், 2017-ஆம் ஆண்டு வேலைவாய்ப்பு அறிவிப்பு எண் 1/2017 வாயிலாகப் பெறப்பட்ட விண்ணப்பதாரர்களில் தகுதிவாய்ந்த, **53** விண்ணப்பதாரர்களுக்கும் மற்றும் கரூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தால் பரிந்துரை செய்யப்பட்டுள்ள நபர்களுக்கும், வருகின்ற **24.11.2018-**ஆம் தேதி காலை 10.00 மணிக்கு, நேர்காணல் நடைபெறவுள்ளது மேலும், மேற்குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்கு தகுதியான விண்ணப்பதாரர்கள், நிராகரிக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள், மற்றும் வேலை வாய்ப்பு அலுவலகத்தால், பரிந்துரைக்கப்பட்ட நபர்களின் விபரங்கள் இந்நீதிமன்ற இணையதளத்தில் **(https://districts.ecourts.gov.in/tn/karur)** வெளியிடப்பட்டுள்ளது, என்ற விபரமும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. எனவே, இணையதளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதியான நபர்கள் மட்டும் அனைத்து சானிறதழ்களின் அசல் மற்றும் நகல்களுடன் மேற்குறிப்பிடப்பட்டுள்ள, தேதி மற்றும் நேரத்தில் கரூர் மாவட்டம் தாந்தோணிமலை, ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் உள்ள முதன்மை மாவட்ட நீதிமன்ற அலுவலகத்தில் ஆஜராகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு, மாவட்ட முதன்மை நீதிபதி அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு:**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**கரூர்.**